அதிகமான கூட்ட நெரிசல்களும் உண்டு. எனக்கும் திரைப்படத் துறையில் அதிகம் அனுபவம் இருக்கின்ற காரணத்தினால், அதனை நான் அறிந்தவன்தான். அதனால்தான் ஒரு புறவழிச் சாலை அமைக்க வேண்டுமென்ற அடிப்படையில், இந்த அரசாங்கம் வந்தவுடனேயே ஈரோட்டையும், சத்தியமங்கலத்தையும் இணைக்கிற புறவழிச் சாலைக்கு, ஏறத்தாழ 8.6 கிலோ மீட்டர் தூரம் சாலை அமைப்பதற்காக தற்போது சாத்தியக்கூறு இருக்கிறதா என்ற அடிப்படையில் DPR தயார் செய்வதற்காக ரூ.70 இலட்சம் நிதியொதுக்கப்பட்டு, அந்தப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அது முழுமையடைந்தவுடனேயே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அனுமதியோடு, அந்தப் புறவழிச் சாலையை இந்த அரசாங்கம் கட்டாயம் அமைக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 224, மாண்புமிகு உறுப்பினர் திரு. இ.மா. மான்ராஜ், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

224—

நியாய விலைக் கடை

***21172—திரு. இ.மா. மான்ராஜ்:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, பிள்ளையார்நத்தம் கிராமத்தில் முழுநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், கூட்டுறவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் சட்டமன்றத் தொகுதி, பிள்ளையார்நத்தம் ஊராட்சியில் Spspl 32 பூவாணி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின்கீழ் ஏற்கெனவே பிள்ளையார்நத்தம் முழுநேர நியாய விலைக் கடை செயல்பட்டு வருகிறது. ஆகவே, புதிதாக மேலும் ஒரு முழுநேர நியாய விலைக் கடை அமைக்க அவசியம் எழவில்லை.

2023 அக்டோபர் 11]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இ.மா. மான்ராஜ் அவர்கள்.*

திரு. இ.மா. மான்ராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தமிழர் எடப்பாடியார் அவர்களை வணங்குகிறேன். ஸ்ரீவில்லிபுத்தூர் ஊராட்சி ஒன்றியம், பிள்ளையார்நத்தம் ஊராட்சி, மேலத்தொட்டிபட்டி, கம்பத்துபட்டி, காதிபோர்டு ஆகிய கிராமங்களில் 600-க்கும் மேற்பட்ட குடும்ப அட்டைகள் உள்ளதால், பிள்ளையார்நத்தம் முழுநேரக் கடையினைப் பிரித்து, அந்தக் கிராமங்களுக்கு பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

முற்பகல் 10-50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிற பிள்ளையார்நத்தத்தில் செயல்படுகின்ற பூவாணி தொடக்க வேளாண் கூட்டுறவுச் சங்க நியாய விலைக் கடை 1,217 குடும்ப அட்டைகளுடன், முழு நேரக் கடையாகச் செயல்பட்டு வருகிறது. அரசின் சொந்தக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. ஆகவே, இந்த முழு நேரக் கடையில் பிள்ளையார்நத்தம் கிராமத்தைச் சேர்ந்த 597 குடும்ப அட்டைகளும், காதிபோர்டைச் சேர்ந்த 80 குடும்ப அட்டைகளும், கம்பத்துப்பட்டியைச் சேர்ந்த 450 குடும்ப அட்டைகளும் அடங்கும். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்பதைப்போல, பிள்ளையார்நத்தம் கிராமத்தில் மேலும் ஒரு முழு நேர நியாய விலைக் கடை அமைவதற்கான சாத்தியங்கள் இல்லை.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இ.மா. மான்ராஜ் அவர்கள்.*

திரு. இ.மா. மான்ராஜ்: *மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் நான் பகுதி நேர கடைதான் கேட்டேன். சின்னத்தூர் தாலுகா, சொக்கலாம்பட்டி, பெருமாள்தேவன்பட்டி ஆகிய கிராமங்களுக்கு முழு நேர நியாய விலைக் கடை செயல்படுகிறது. இந்தக் கடையின்*

கட்டடம் இடிந்து, முற்றிலும் செயல்பட முடியாத நிலையில் உள்ளது. எனவே, உடனடியாக கட்டடம் கட்டித் தர இந்த அரசு முன்வருமா என தங்கள் வாயிலாக கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன்: மேற்கண்ட பகுதிகளில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவருடைய சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கட்டடத்தை அமைத்துக் கொடுத்தால், பகுதி நேரக் கடைகள் இயங்குவதற்கு அரசின் சார்பிலே ஏற்பாடு செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி அவர்கள்.

திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு.வி.க. நகர் தொகுதி, ward எண் 71, மேட்டுப்பாளையம், அருந்ததி நகரில் 16 தெருக்கள் உள்ளன. அந்த 16 தெருக்களிலும் சுமார் 750 குடும்ப அட்டைதாரர்கள் இருக்கின்றனர். அந்த 750 குடும்ப அட்டைதாரர்களும் உணவுப் பொருட்களைப் பெறுவதற்கு நீண்ட தூரம் பயணித்து, ஜமாலியா பகுதியிலே உணவுப் பொருட்களை பெறவேண்டிய சூழ்நிலை உள்ளது. எனவே, அவர்களின் சிரமத்தைப் போக்குகின்ற வகையில் அந்தப் பகுதியில் இராஜீவ் காந்தி பூங்காவிற்கு அருகில் இருக்கின்ற காலி மைதானத்தில் நியாய விலைக் கடை அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், 16 தெருக்கள் அடங்கிய தன்னுடைய தொகுதியில் இருக்கக்கூடிய பகுதிக்கு 750 குடும்ப அட்டைகள்தான் இருப்பதாக குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள். குறிப்பாக, நகரப் பகுதிகளில் 2,000 குடும்ப அட்டைகள் இருப்பதற்குக்கூட சாத்தியங்கள் உண்டு. ஆகவே, 750 என்பது ஒரு கூடுதலான

2023 அக்டோபர் 11]

எண்ணிக்கையாக தெரியவில்லை. ஏனென்றால் நகரப் பகுதியில் 1000-க்கு மேல் அதாவது, 1,200 cards இருக்க வேண்டும். கிராமப் பகுதிகள் என்றால் 800 cards இருந்தால் போதும். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது, நகரப் பகுதியில், 750 குடும்ப அட்டைகள் தான். எனவே, மெயின் கடையில் இருந்து பிரித்தால் தாய் கடை தனது தகுதியை இழந்துவிடும். ஆகவே, சூழ்நிலைகளுக்கு ஏற்றவாறு, தேவைப்பட்டால் நானும் அங்கே சென்று, பார்வையிட்டு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. அசோக்குமார் அவர்கள்.

திரு. கி. அசோக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு வணக்கம். கிருஷ்ணகிரி சட்டமன்றத் தொகுதி, கிருஷ்ணகிரி ஒன்றியம், அகசிபள்ளி ஊராட்சி, வேட்டியம்பட்டி நியாய விலைக் கடையில் 1,050 குடும்ப அட்டைகள் உள்ளன. இந்தக் கடையிலிருந்து 350 குடும்ப அட்டைகளைப் பிரித்து ராயக்கோட்டை கிராமத்தில் பகுதி நேர நியாய விலைக் கடை அமைத்துத் தர அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 1,050 குடும்ப அட்டைகள் இருப்பதாக சொல்கின்ற அந்தப் பகுதி, கிராமப் பகுதியாக இருக்கின்ற காரணத்தால், ஏற்கெனவே நான் அளித்த பதிலின் அடிப்படையில், அவரும் அந்தப் பகுதி நேரக் கடை அமைவதற்கான இட வசதிகளை செய்து தந்தால், அதுகுறித்து உரிய ஏற்பாடுகள் செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 225, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வபெருந்தகை, மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.